**10.09.2024**

**CC No. 50/2024**

**PW1 : ஞானசேகரன் ( பவர் ஏஜெண்ட்)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) எனக்கு ஆங்கிலம், தமிழ் எழுத படிக்க தெரியும். எனது முதல்வரும் நானும் சுமார் 40 வருட கால நண்பர்கள் ஒரே இடத்தில் வேலை செய்தோம். எனது முதல்வர் கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். எனக்கும் வழக்கு விபரம் தெரியும். இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பொது அதிகாரபத்திரத்தில் சாட்சிகள் யாரும் கையொப்பம் செய்யாததால் அது செல்ல தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி பொது அதிகார பத்திரத்தில் சாட்சி சொல்வதற்கு எனக்கு அதிகாரம் அளிக்கவில்லை என்றாலும், அவ்வாறு கொடுக்கப்பட்டிருந்தாலும், சாட்சி சொல்ல எனக்கு தகுதி இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி எங்கு வசிக்கிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் முத்துபட்டிணத்தில் வசிக்கிறார். முகவரி தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எதிரியின் ஆதார் அட்டையா என்றால் எதிரியின் ஆதார் அட்டையை நான் பார்த்ததில்லை.

2) 2015 முதல் 2020 வரை பல்வேறு தேதிகளில் எதிரிக்கு காசோலை மூலம் பணம் கொடுத்தற்கான வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறோம் எதிரியிடம் கடனுறுதிசீட்டு எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. நம்பிக்கையின் அடிப்படையில் காசோலை மூலம்தான் கொடுத்தோம். காவல் நிலையத்தில் எதிரி மீது என் முதல்வர் புகார் அளித்தார் என்றால் சரிதான். காவல்நிலைய விசாரணையில் எதிரியை மிரட்டி காசோலையை பெற்றார் என்றால் சரியல்ல. எதிரி விசாரணைக்கு வரவில்லை. பின்னர் வீட்டிற்கு வந்து காசோலை கொடுத்தார். சாட்சி பின்னிட்டு எதிரி ஒரு முறை விசாரணைக்கு வந்ததாக சொல்கிறார். எதிரி தற்போது வரை எவ்வளவு பணம் செலுத்தியிருக்கிறார் என்றால் வட்டி கொடுத்திருக்கிறார், எவ்வளவு தொகை என்று நினைவில்லை. கடனுறுதிசீட்டு இல்லாததால் இது கடன் பரிவர்த்தனை இல்லை

என்றும், எனது முதல்வருக்கு செலுத்த வேண்டிய தொகைகளை எதிரி திரும்பி செலுத்தியபின்னரும், இவ்வழக்கு காசோலையை போல் மேலும் 4 காசோலைகளை திரும்ப தராமல் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3) என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ. 1 காசோலையில் பாலகிருஷ்ணன் என்று நான்தான் எழுதியிருக்கிறேன் என்றால் சரிதான். காசோலையில் உள்ள தொகை மற்றும் தேதியை நான் தான் பூர்த்தி செய்தேன் என்றால் சரிதான். எதிரி சொல்ல சொல்ல நான் எழுதினேன். எதிரியின் சரியான முகவரி எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ. 1 காசோலையில் உள்ள கையொப்பமும், ம.சா.ஆ. 4ல் உள்ள கையெழுத்தும் வேறுபட்டு உள்ளதா என்றால் இல்லை. ஒன்றாகத்தான் உள்ளது. எங்கள் தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு சார்பு செய்யப்படவில்லை என்றாலும், அஞ்சல் அட்டையில் எதிரியின் கையொப்பத்தை நாங்களே செய்து பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. எதிரியின் உண்மையான முகவரி 35, ஐய்யனார்புரம் , 2 வது தெரு, செக்காலை என்றால் அதற்கு பிறகு முகவரி மாறியிருக்கலாம். எதிரி மருந்தகம் நடத்துவதற்கு ஆதாரமாக எதிரியின் மருந்தகத்தில் மருந்துகள் வாங்கியதற்கான ரசீதுகளை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. பல வருடங்கள் ஆனதால் ரசீதுகள் இல்லை.

4) எந்த தேதிகளில் எதிரிக்கு பணம் கொடுத்தோம் என்றால் தேதி,மாதம் நினைவில்லை. 2015-ல் ஒரு முறையும் 2020-ம் ஆண்டு 2 முறையும் கடன் வாங்கியுள்ளார். எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் ஐடி கம்பெனியில் பணிபுரிவதாக சொன்னார். தற்போது பணிபுரிகிறாரா என்பது தெரியவில்லை. எதிரி நகை கடை நடத்தி வந்ததாக புகார்மனுவில் சொல்லியிருக்கிறனே் என்றால் சரிதான். நகை கடையும் நடத்தி வந்தார். எதிரியும் அவரது கணவரும் எவ்வளவு தொகை திரும்ப செலுத்தினார்கள் என்று எனது புகார் மனுவில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. வட்டி மட்டும் செலுத்தியதாக சொல்லியிருக்கிறேன். எதிரியின் கணவர் மீது தனியாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். சிவகங்கை காவல்துறை கண்காணிப்பாளரிடம் நாங்கள் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். பின்னர் காவல்துறை துணை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான்.

அதன் பின்னர்தான் வடக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தோம் என்றால் சரிதான் அதற்கு பின்புதான் எதிரி காசோலையை கொடுத்தார் என்றால் சரிதான். காலாவதியான கடனுக்கு காவல் துறையில் வைத்து மிரட்டி எதிரியிடம் இருந்து காசோலைகள் , கடனுறுதிசீட்டு மற்றும் வெற்று பத்திரங்கள் பெற்றோம் என்றால் சரியல்ல.

5) எனது பொது அதிகார பத்திரம், நாங்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பும் செல்லாது என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து காசோலைகள் மற்றும் ஆவணங்கள் பெற்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகல் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எதிரியின் சகோதரியை தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் சகோதரி என் முதல்வருக்கு பணம் அனுப்பிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அனுப்பியிருக்கலாம். எதிரியின் சகோதரி எங்களிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

**சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's)**
**விரைவு நீதிபதி, காரைக்குடி**